3. கவன ஈர்ப்பு

ஒட்டன்சத்திரம் மற்றும் சத்திரப்பட்டியில் புறவழிச் சாலை அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) திரு. எ.வ. வேலு, என்ன சொல்லுங்கள். (குறுக்கீடு) நேரமில்லை, அதுகுறித்து அரசு நடவடிக்கை எடுத்துவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடு) அரசு நடவடிக்கை எடுத்துவிட்டது, உட்காருங்கள். அவசர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) அதுகுறித்து அரசு நடவடிக்கை எடுத்துவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அர. சக்கரபாணி அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. எ.வ. வேலு, நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு)*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எ.வ. வேலு அவர்கள், ஏதோ கேட்க விரும்புகிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுக்குப் பேச நான் வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது; மைக் கொடுக்கப்பட்டிருக்கிறது, நீங்கள் பேசுங்கள்.*

***திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேசிய நெடுஞ்சாலை எண் 209-ல் ஒட்டன்சத்திரம் மற்றும் சத்திரப்பட்டியில் புறவழிச் சாலை அமைத்துத்தர வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

*மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

தேசிய நெடுஞ்சாலை 209—ல் ஒட்டன்சத்திரம் நகருக்கு கி.மீ.23/8 (லக்கையன்கோட்டை) கி.மீ. 31/2 (அரசபிள்ளப்பட்டி) வரை புறவழிச் சாலை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணிக்கு (59.8875 ஹெக்டேர்) ஆண்டுத் திட்டம் 2007—2008—ல் ரூ.16.77 கோடிக்கு மத்திய அரசு 31—3—2008—ல் நிருவாக ஒப்புதல் அளித்தது.

வரைவு நில எடுப்பு அறிக்கை 3(D)—க்கு மைய அரசு 9—10—2012—ல் ஒப்புதல் அளித்துள்ளது. மொத்தமாக 6 கிராமங்களுக்கு நில எடுப்பிற்கான ஆணை (Award) மாவட்ட வருவாய் அலுவலர், திண்டுக்கல் அவர்களால் அளிக்கப்பட்டது. ஆனால் புதிய நில வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் ஏற்பட்ட விலையேற்றத்தின் காரணமாக, 5 கிராமங்களுக்கு மட்டுமே மதிப்பீட்டுத் தொகையிலிருந்து நில இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. எனவே, திருத்திய நில எடுப்பு மதிப்பீடு ரூ.30.62 கோடிக்கு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு. 27—3—2015—ல் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, மொத்தம் ரூ.28.55 கோடி உரிய நில உரிமையாளர்களுக்கு வழங்கி, பெயர் மாற்றம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. புறவழிச் சாலை கட்டுமானப் பணிக்கான மதிப்பீடு ரூ.235.91 கோடிக்கு மைய அரசின் ஒப்புதலுக்காக 22—1—2016 அன்று அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது.

சத்திரப்பட்டி புறவழிச் சாலை தேசிய நெடுஞ்சாலை 209 கி.மீ.39/6-39/0-2.611 கி.மீ. (நீளம்) :

சத்திரப்பட்டி புறவழிச் சாலை அமைக்க நில எடுப்புப் பணிக்கு ரூ.0.6 கோடிக்கு மைய அரசு 13—12—2005—ல் ஒப்புதல் வழங்கியது. நில எடுப்பு செய்வதற்கான அறிவிப்பு 3A(1) இந்திய அரசிதழில் வெளியிடும் பொருட்டு, 23—1—2010—ல் மைய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில், தேசிய நெடுஞ்சாலை 209—யை அகலப்படுத்தி மேம்பாடு செய்ய இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்மூலம் தெரிய வந்துள்ளது.

2016 ஆகஸ்ட் 8]

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

***திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். ஒட்டன்சத்திரம் மற்றும் சத்திரப்பட்டியில் புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று 2005 ஆம் ஆண்டு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியது. இன்றைக்குத் தமிழ்நாட்டில் மிகப் பெரிய காய்கறி மார்க்கெட் ஒட்டன்சத்திரத்தின் மையப் பகுதியில்தான் அமைந்துள்ளது. அதேபோன்று, மிகப் பெரிய தயிர், வெண்ணெய், பால் மார்க்கெட்டும் ஒட்டன்சத்திரத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. தென் மாவட்டங்களிலிருந்து தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களிலிருந்து ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், ஊட்டி செல்கின்ற வாகனங்கள், ஒட்டன்சத்திரம் வழியாகத்தான் செல்கின்றன. எனவே, போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், திருப்பூரில் உற்பத்தி செய்கின்ற பின்னலாடைகள், தூத்துக்குடி துறைமுகத்திற்கு கண்டெய்னர் லாரிகள் மூலமாக ஒட்டன்சத்திரம் நகரத்தின் வழியாகத்தான் அதிகமாகச் செல்கின்றன. மாலை நேரங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது விவர அறிக்கையில் சுமார் ரூபாய் 235.91 கோடிக்கு மத்திய அரசின் ஒப்புதலுக்காக 22–1–2016 அன்று அனுப்பப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். ஆனால், இந்தச் சாலையானது தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் மதிப்பீட்டை, டெல்லி, தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு அனுப்பியுள்ளீர்கள். தமிழ்நாடு அரசு அந்த மதிப்பீட்டை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு அனுப்ப வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மதிப்பீட்டை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு அனுப்புவார்களா என்பதை அறிவதுடன், சத்திரப்பட்டி புறவழிச் சாலை என்பது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி இன்னொரு கேள்வி இருக்கிறது. (குறுக்கீடு) அப்போது கேள்வி கேளுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: *சத்திரப்பட்டி புறவழிச் சாலை என்பது 2005 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டது. இன்றைக்கு சத்திரப்பட்டியில் 2 அடுக்கு, 3 அடுக்கு என்று அடுக்குமாடி கட்டடங்கள் நிறைய இருக்கின்றன. அதிலே, யாரும் சாலையைவிட்டு ஒரு அடிகூட விலக முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தச் சாலைக்கும் புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். தேசிய நெடுஞ்சாலை 209—ல் திண்டுக்கல்லிலிருந்து பெங்களூர் செல்கின்ற சாலையில் எத்தனை புறவழிச் சாலைகள் அமைக்கப்படுகின்றன? திட்ட மதிப்பீடு தயார் செய்யப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். தேசிய நெடுஞ்சாலை ஆணையம் எப்போது திட்ட அறிக்கையை அரசுக்கு அளிக்கவிருக்கிறது? அந்தப் பணி எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றோம். ஆண்டுத் திட்டம் 2007—2008—ல் ரூபாய் 16.77 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதலுக்காக மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டு, நில எடுப்புப் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. இடையில் நிலத்தினுடைய வழிகாட்டி மதிப்பு உயர்ந்த காரணத்தினால், இருக்கின்ற நிதி 5 கிராமங்களுக்கு அந்த நில எடுப்புத் தொகையாக வழங்கப்பட்டது. எஞ்சிய பகுதிகளுக்கு மத்திய அரசிடம் கோரப்பட்டு, நிதி பெறப்பட்டு, கிட்டத்தட்ட 6 கிராமங்களில் 55.32.37 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதற்குண்டான தொகையாக 410 நில உரிமையாளர்களுக்கு 28 கோடியே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், அவை அலுவல்கள் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கே தனியாக என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? அவை அலுவல்கள் இங்கே நடைபெற்றுக்*

கொண்டிருக்கிறது. இங்கே கவனியுங்கள். உங்கள் உறுப்பினர்தான் கேள்விக் கேட்டிருக்கிறார். மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குண்டான தொகை 28 கோடியே, 54 இலட்சத்து, 54 ஆயிரத்து 382 ரூபாய் வழங்கப்பட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அதோடு, சாலை அமைக்க ரூபாய் 235 கோடியே, 91 இலட்சம் மதிப்பீடு மத்திய அரசிடம் ஒப்புதல் பெறுவதற்காக 22–1–2016 அன்று அனுப்பப்பட்டிருக்கிறது. ஒப்புதல் பெறப்பட்டவுடன் இந்தப் பணி தொடங்கப்படும். சத்திரப்பட்டி புறவழிச் சாலைக்கு 2010–ல் நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையை எடுக்கும்போது, தேசிய நெடுஞ்சாலை 209–ல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, விரிவான திட்ட அறிக்கை தயாரித்து, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அந்தப் புறவழிச் சாலையை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம் என்று தெரிவித்த காரணத்தினால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, ஒட்டன்சத்திரம், சத்திரப்பட்டி ஆகிய இரண்டிற்கும் புறவழிச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, ஒரு கேள்வி போதுமா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

முற்பகல் 11–10

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மதிப்பீடு, திட்ட அறிக்கை எப்பொழுது அரசுக்குக் கிடைக்கும் என்பதையும், அந்தச் சாலையிலே எத்தனை புறவழிச் சாலைகள் வர இருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன். திண்டுக்கல்லில் இருந்து பழனிக்கு 52.8 கி.மீ. தூரம்; இதில் 10 கி.மீ. தூரம் வரை புறவழிச் சாலைக்கு நிலம் எடுக்கின்ற பணி முடிவு பெற்றுவிட்டது. நிலம் வகை மாற்றம் எல்லாம் செய்யப்பட்டு, மதிப்பீடு தயார்

ALONE TRIUMPHS

[திரு. அர. சக்கரபாணி] [2016 ஆகஸ்ட் 8

செய்யப்பட்டுவிட்டது. அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் பழனியிலே அமைந்திருக்கின்ற காரணத்தினால், தை பூசக் காலங்களில் தென் மாவட்டங்களிலிருந்து, குறிப்பாக, சிவகங்கை, இராமநாதபுரம், தேனி, மதுரை மாவட்டங்களிலிருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள், தைப்பூச திருவிழா நாட்களில் பழனிக்கு பாதயாத்திரையாக நடந்து வருகிறார்கள். அந்த நேரத்திலே, 15 நாட்களுக்கு திண்டுக்கல்லில் இருந்து பழனிக்குப் பேருந்துகள் செல்ல முடிவதில்லை. மாவட்ட நிருவாகம், திண்டுக்கல்லில் இருந்து தாடிக்கொம்பு, இடையக்கோட்டை, கள்ளிமந்தையம், தொப்பம்பட்டி வழியாகப் பேருந்துகளை இயக்குகிறார்கள். போக்குவரத்து அந்த நேரத்திலே முற்றிலுமாக நிறுத்தப்படுகிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சாலை, திண்டுக்கல்லில் இருந்து சத்தியமங்கலம் வரை சுமார் 265.8 கி.மீ. தூரத்திற்கு, திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நிலம் எடுத்து பணி ஆரம்பிப்பதற்கு காலதாமதம் ஆகும். எனவே, திண்டுக்கல்லில் இருந்து பழனி வரை உள்ள சாலையை முன்னுரிமை கொடுத்து தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் பரிந்துரை செய்து, உடனடியாக 52.8 கி.மீ. சாலையை மட்டும் விரைவாக செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அந்த வழியாக பக்தர்கள் நடந்து செல்கிறார்கள். நடந்து செல்லும் பக்தர்களுக்கென்று ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ள 1 மீட்டர், 1½ மீட்டர் சாலை என்பது போதுமானதாக இல்லை. எனவே, 5 மீட்டர் அளவிற்கு, பக்தர்கள் நடப்பதற்காக தனி பாதை அமைப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஊரான எடப்பாடியிலிருந்துதான் காவடி பழனிக்கு அதிகமாக வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்; பங்குனி உத்திரத்திற்கு எடப்பாடி காவடி என்றால், அது பெரிய காவடியாக, தீர்த்தக் காவடியாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தொகுதியிலிருந்து மாவட்டத்திலிருந்து பழனி முருகன் கோயிலுக்கு அதிகம் வருகிறார்கள்; பெரிய காவடிகளை எடுத்துக்கொண்டு சிறப்பாக வருகிறீர்கள். அதனால் பழனி

2016 ஆகஸ்ட் 8] [திரு. அர. சக்கரபாணி]
அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்கு மக்கள் வருவதற்கு வசதியாக அந்தப் பணியை விரைந்து முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதிக போக்குவரத்து நெரிசல் இருக்கின்ற காரணத்தினாலே, அந்தச் சாலைப் பணியை துரிதமாக, வேகமாக மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விரைந்துதான் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறை பணியை மேற்கொண்டிருக்கிற காரணத்தினாலே, இடையிலே வழிகாட்டுதல் மதிப்பு உயர்ந்த காரணத்தினாலே, காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. அதற்குண்டான தொகை வழங்கப்பட்டு, நில மாற்றம் செய்யப்பட்டு, பணி துவங்க இருக்கிறது.

மற்றொன்று; இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், அந்தச் சாலையை நான்கு வழிச்சாலையாக விரிவுபடுத்த இருக்கின்றது. மேலும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதைத் தயாரித்துக் கொடுத்தபிறகுதான் எத்தனை புறவழிச் சாலை அமையும் என்பது நமக்குத் தெரியும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பழனி தைப்பூசம் மற்றும் பல்வேறு விழாக் காலங்களில் பக்தர்கள் அதிகமாக அந்தச் சாலை வழியாகச் செல்கின்றார்கள்; எனவே, விரைந்து அந்தச் சாலைப் பணியை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான ஆணையைப் பெற்று, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் இந்தப் பணியை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.